பத்திரிக்கைச் செய்தி

பட்டா மாற்றம் செய்ய ரூ.1,000/- லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் நில அளவை துறை உதவி ஆய்வாளருக்கு 8 ஆண்டுகள் சிறை மற்றும் ரூ.10,000/- விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.விக்டர் சாலமன், முன்னார்குடி, திருவாரூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய நண்பர் இடத்திற்கு பட்டா மாற்றம் செய்ய தாசில்தார் அலுவலகத்தில் செயல்படும் நிலஅளவை துறை உதவி ஆய்வாளரிடம் விண்ணப்பித்திருந்தார். திரு.செல்வராஜன், நிலஅளவை துறை உதவி ஆய்வாளர், தாசில்தார் அலுவலகம், திருவாரூர் மாவட்டம் தனக்கு ரூ.1,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளனர். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருவாரூர் பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 21.07.2014 அன்று மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாரரிடமிருந்து திரு.செல்வராஜன், நிலஅளவை துறை உதவி ஆய்வாளர் லஞ்சபணம் ரூ.1,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் நேற்று 11.03.2026ந் - தேதி மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்ற, நீதிபதி திருவாரூர் மாவட்டம் திரு.செல்வராஜன், நிலஅளவை துறை உதவி ஆய்வாளர், அவர்களுக்கு 8 ஆண்டுகள் சாதாரண சிறை தண்டனை மற்றும் ரூ.10,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.